திட்டம் வகுக்கப்பட்டது. அந்த மாணவர்கள் மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட படிப்பை இம்மாநிலத்தில் படிக்க அவர்களுக்கு வகை செய்வதே இதன் நோக்கமாகும். இத்திட்டம் 1963-64 முதற்கொண்டு செயலில் இருந்து வருகிறது. 1968-69 முதற்கொண்டுஇத் திட்டத்தின் கீழ் படிப்பு உதவித் தொகை வழங்கப்படுபவர்களின் எண்ணிக்கை இரண்டாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

திரு. டி. மார்டின் : மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார். இந்த இரண்டு மாணவர்களுக்காக இந்த அரசாங்கம் செலவு செய்த தொகை எவ்வளவு என்பதை அறிவிக்கலாமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒரு மாதத்திற்கு ரூ. 150.

Thiru K. VINAYAKAM : For the students coming from Mauritius, are they admitted for any technical courses like M.B.B.S.; B.E., etc. ?

The Hon. Thiru S. MADHAVAN : Including professional colleges and post-graduate courses.

வேம்பரளிக்கருகில் நீர்த்தேக்கம்.

*428 **வினா: திரு. பெ. மலேச்சாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்ககண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) மேலூர் வட்டத்தில் வேம்பரளிக்கு அண்மையில் சிறிய நீர்த் தேக்கம் அமைப்பது பற்றிய செயற்குறிப்பினை அரசு வகுத்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அது பற்றிய விவரம் அவை முன் வைக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) மேலூர் வட்டம் புதூர் கிராமத்தின் வேம்பரளி சிற்றூருக்கு அண்மையிலுள்ள குடும்பி மேடு, சின்னகுண்டுக்கு இடையில் பாயும் ஓடையின் குறுக்கே குளம் ஒன்று ஏற்படுத்தும் செயற்குறிப்பு புலனாய்வு செய்யப்பட்டு அது குறித்த விவரமான வரைபடங்களும், மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

(இ) செயற்குறிப்பு இறுதி செய்யப்பட்ட பிறகே விவரங்கள் கிடைக்கு மாதலால், இவ்வினா இப்போது எழவில்லை.

திரு. பெ. மலேச்சாமி : தலைவர் அவர்களே, இந்தப் பகுதி புஞ்சை கள் நிறைந்த பகுதி. இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால், சுமார் 200 ஏக்கருக்கு மேலே பாசன வசதி பெறுகின்ற நிலங்களாக மாறும். ஆகவே அமைச்சர் அவர்கள் விரைவிலே இந்தத் திட்டத்தை அமுல் செய்வதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: ஏற்கெனவே நான் சொன்ன பதிலில் இதற்குப் பதில் இருக்கிறது.

சோழவந்தான் ஏரி.

*429 **வினா : திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்குப் விடையளிப் பாரா—

(அ) சோழவந்தான் வடகரைக் கண்மாயை ஆழப்படுத்த வேண்டு மென்கிற வேண்டுகோள் அப்பகுதி விவசாயிகளிடமிருந்து வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

1969 மார்ச் 22]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) சென்னை, தூர் எடுத்தல்-பண்படுத்தல் பிரிவைச் சேர்ந்த நிர்வாகப் பெறியாளர், இந்த ஏரியில் தூர் எடுப்பதற்கான நேரடி ஆய்வை முடித்துள்ளார் ; இதற்கான திட்டங்களும் மதிப்பீடுகளும் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்திலிருந்து (பாசன) தலைமைப் பொறியாளருக்கு அனுப்பப்பட்டு அன்னாரின் தொழில் நுணுக்கக் குறிப்புரைகளுடன் மேற்பார்வைப் பொறியாளருக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

வைகை அணையிலிருந்து மின்சாரம்.

*430 வினா : **திரு. எஸ். அக்கினிராஜு :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) மதுரை மாவட்டம் வைகை அணையிலிருந்து மின்சாரம் எடுக்கும் செயற்குறிப்பு ஏதாவது அரசினிடமிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், எந்த அளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : (அ) and (இ) வைகை அணைக்குப் பின்புறத்தில் 10 மெகாவாட் உற்பத்தி திறனளவு கொண்ட மின் நிலையம் ஏற்படுத்த முடியும். ஏற்கெனவே அவசியமான பெருங் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. இருப்பினும், இதில் கிடைக்கக்கூடிய மின்சக்தி வளம் மிகவும் குறைவானதும், குறிப்பிட்ட காலத்தில் மட்டுமே கிடைப்பதும். ஆகையால் மிகுந்த ஆதாயமுள்ள பெரிய வேலைத் திட்டங்கள் முடிந்த பின்பே இவ்வேலைத் திட்டம் ஆலோசிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(அ) நவசக்தி நாள் இதழ்மீது அவை உரிமைக் கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னசாமி அவர்கள் நவ சக்தி என்ற ஒரு நாளிதழின் மீது ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை நான் நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்

நாகூரில் இரு முஸ்லீம் பெண்களை வீட்டிலிருந்து போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் வெளியே அழைத்துச் சென்றதாகக் கூறப்படும் செய்தியும், அதனால் ஏற்பட்டுள்ள பரபரப்பும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு ஞானசம்பந்தன் அவர்கள் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்கள். அதில் "தஞ்சை மாவட்டம், நாகூரில் 20-3-1969 இரவு நாகூர் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒரு முஸ்லீம் வீட்டிலிருந்து எவ்விதக் காரணமுமின்றி இரு பெண்களைக் கட்டாயப்படுத்தி வெளியே அழைத்துக்கொண்டு போனதால், நாகூர் முஸ்லீம் பெரு மக்களிடம் பெரும் பரபரப்பையும் கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இதனால் ஏற்படும் விளைவுகளைத் தடுக்க இம்மன்றத்தின் இதர நடவடிக்கைகளை ஒற்றிவைத்து இதை விவாதிக்க வேண்டும்" எனக் கோரியிருக்கிறார்கள்.

அது எப்படி அவையினுடைய நிகழ்ச்சிகளை ஒற்றிவைப்பதற்கு வேண்டிய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சுருக்கமாக விளக்குமாறு மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.